**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 131/2019**

PW1 – விமலா க/பெ பாலகிருஷ்ணன்
நாள்–03.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது சந்து பகுதிக்குதான் என்றால் சரிதான். நான் தலைமையாசிரியை பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் வருவாய் துறையில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரியல்ல நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரிந்து ஓய்வுப்பெற்றார். எனது கணவர் சாலை மதிப்பிட்டு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுப்பெற்றவர் என்றால் சரிதான். தாவா சொத்து 3– அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். A அட்டவணை எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் 9 செண்ட் ஆகும். B அட்டவணை சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் 4 செண்ட் ஆகும்.

C அட்டவணை சொத்து தான் தாவா சொத்து என்றும், C அட்டவணை சொத்தைப் பொறுத்து தான் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். C அட்டவணை சொத்தின் புல எண் என்னவென்றால் புல எண் 135/1 ஆகும். C அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. C அட்டவணை சொத்தின் நீள அகலம் தாவா சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. C அட்டவணை சொத்து யாரிடமிருந்து யார் கிரயம் பெற்றது என்றால் ராஜாமணி என்பவரிடமிருந்து எனது பெயரில் கிரயம் பெறப்பட்டதாகும்.

C அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். C

அட்டவணை சொத்தை நான் ராஜாமணியிடமிருந்து கிரயம் பெறவில்லை என்றும் வழக்கிற்காக கிரயம் பெற்றதாகவும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் C அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதாக எனது வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மொத்தமாக கிரயம் பெற்றதாகும். எனது வீட்டோடு சேர்ந்துதான் C அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதாக வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்தை கிரயம் பெறும் போதுதான் C அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதாக கூறுகிறேனா என்றால் ஆமாம். அவ்வாறு நான் C அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதாக வா.சா.ஆ.1 சொத்து விவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

C அட்டவணை சொத்து எங்கள் நீண்ட அனுபவத்தின் மூலம் சித்தி அடைந்து விட்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா C அட்டவணை சொத்தை கிரய தேதியிலிருந்து நாங்கள் அனுபவித்து வருவதாக எனது Reply Statement –ல் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கீழ சன்னதி வீதிக்கு வடக்கு , எங்கள் வீடு மற்றும் மனைக்கு கிழக்கு, ஸ்ரீஅம்மன் சன்னதி தொண்டிக்கு தெற்கு, பிரதிவாதியின் மாடிவீட்டிற்கு மேற்கில் தான் C அட்டவணை சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். C அட்டவணை சொத்தின் சரியான புல எண் 135/23 என்றால் சரியல்ல, புல எண் 135/22 தான் சரியாகும். C அட்டவணை சொத்தின் சரியான புல எண் 135/22 என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 –ல் புல எண் 135/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20.12.2019–ல் தாவா C அட்டவணை சொத்தை ஆக்கிரமித்துவிட்டதாக வழக்குரையை திருத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.14–ன்படி 22.03.2022 –ல் தான் போர் இறக்கப்போவதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 2019–ல் புகார் கொடுத்தேன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் எனது திருத்தப்பட்ட வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் 2019–ல் புகார் கொடுத்து நடவடிக்கை இல்லை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

C அட்டவணை சொத்தை எப்போது ஆக்கிரமித்துக்கொண்டதாக திருத்தப்பட்ட வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை, வருடம் சொல்லியுள்ளேன். தாவா C அட்டவணை சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டதில்லை எனவும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது எனவும், ஆக்கிரமிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10–ல் வரிசையில் எந்த தேதியில் புகைப்படம் எடுத்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 வரிசையான புகைப்படத்தை யார் எடுத்தது என்றால் எனது கணவர் எடுத்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் புகைப்படம் எனது கணவரால் எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

1990–ல் ராமமூர்த்தி என்பவரிடமிருந்து தாவா C அட்டவணை சொத்தையும் அதை சுற்றியுள்ள இடத்தையும் 1–ம் பிரதிவாதி கிரயம் பெற்று உபயோகப்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 1990 –ம் ஆண்டு 1–ம் பிரதிவாதி கிரயம் பெறும் போது மாடிவீடு உட்பட கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். அது சின்ன வீடாக இருந்தது. பின்னிட்டு ஏற்கனவே இருந்த சின்ன மாடிவீட்டின் முன்பகுதியான தெற்கில் 1–ம் பிரதிவாதி லாட்ஜ் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வீட்டை இடித்து தான் கட்டினார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10–ல் உள்ள புகைப்படத்தில் வடக்கு பகுதியில் உள்ளது பழைய வீடு

எனவும் தெற்கு பகுதியில் கட்டியுள்ளது தான் புதிய லாட்ஜ் என்றால் சரிதான். 2–ம் ஒன்றாகத்தான் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

1–ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் ஒரே தாய் சுவராகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மேற்குபுற தாய் சுவற்றில் தான் பிரதிவாதிகள் C அட்டவணை சொத்திற்கு செல்வதற்கு திறப்பு வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது அடைத்துவிட்டார்கள். வா.சா.ஆ.10 வரிசை உள்ள புகைப்படத்தில் உள்ளதுதான் மேற்படி பிரதிவாதிகளால் வைக்கப்பட்ட திறப்பு என்றால் சரிதான். மேற்படி திறப்பானது பிரதிவாதிகளால் உள்புறமாக திறக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

C அட்டவணை சொத்தை நாங்கள் பயன்படுத்தும் விதமான A அட்டவணை சொத்தில் நாங்கள் திறப்பு ஏதேனும் வைத்துள்ளோமா என்றால் ஏற்கனவே இருந்தது. அவ்வாறு திறப்பு உள்ளதாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. C அட்டவணை சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமையானது என்பதால் தான் C அட்டவணை சொத்தின் முகப்பில் ஒரு கேட்டும், மேற்குபுற தாய் சுவற்றில் திறப்பும் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காகத்தான் நான் அவ்வாறு இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா C அட்டவணை சொத்தின் அமைப்பை காட்டுவதற்கு எனது தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தான் தாக்கல் செய்தோம். தாவா சொத்தை நாங்கள் அளந்து தான் கிரயம் பெற்றோமா என்றால் அளந்து தான் கிரயம் பெற்றோம். எந்த வருடம் அளவீடு செய்யப்பட்டது என்று நினைவில்லை. ஆனால் முறைப்படி தான் அளந்தோம். எனது வழக்குரையில் தாவா சொத்தை அளவீடு செய்து கிரயம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்தை பொறுத்து எனது கணவர் எனக்கு உரிமை மாற்று ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

வா.சா.ஆ.4 ஆன பட்டாவில் எனக்கு 600 சதுர மீட்டருக்கு தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் பத்திரப்படி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 படி எங்களுக்கு 526 சதுர மீட்டர் தான் உரிமையானது என்றால் சரியல்ல. உரிமை மூல ஆவணத்திற்கு விரோதமாக பட்டா அமைந்துள்ளதால் தான் பட்டாப்படி நான் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். B அட்டவணை சொத்தை பொறுத்து எனது கணவர் எனக்க உரிமை மாற்றம் செய்து கொடுக்காத நிலையில் வா.சா.ஆ.4 ஆனது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 வரிசை தவிர எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இதர ஆவணங்கள் வழக்கு A மற்றும் B அட்டவணை சொத்திற்கானது என்றும், C அட்டவணை சொத்திற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல.

C அட்டவணை சொத்தைப் பொறுத்து எங்களுக்கு எவ்வித உரிமை மூலமும் இல்லாத நிலையில் அதைப்பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் வழக்கிற்கு பிறகு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, இதுநாள்வரையில் எங்கள் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது. தாவா C அட்டவணை சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் ஆக்கிரமிப்பு தேதியை இடைமனு எண் 1/21–ல் 20.12.2019 என்றும் திருத்தப்பட்ட பிராதில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

1990–ஆம் ஆண்டு 1–ம் பிரதிவாதி கிரயம் பெறும் போது தரை தளத்தில சன்சைடு இருந்தது என்றும், அதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ.10 வரிசையில் உள்நோக்கத்துடன் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்தல் உள்ள போர்வெல், பைப்லைன், சன்சைடு, திறப்பு அனைத்தும் வழக்கிற்கு முன்பிருந்தே பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள்

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6−ம் மற்றும் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14−க்கான புகார் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா C அட்டவணை சொத்து என்பது 1−ம்

பிரதிவாதி 1990−ல் கிரயம் பெற்ற சொத்துடன் சேர்ந்தது என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அதன் அளவு மற்றும் நீள அகலம் குறித்து வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்து எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லையும் தவறானது என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை மட்டும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்து எங்களுக்கு உரிமையானது என்பதை நிரூபிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.